# ஈரோடு மாவட்டம்

# வேளாண்மைத்துறை




**உணவு தானிய உற்பத்தி சாதனை அடைய தேவையான உத்திகள்**

- கிராம அளவிலான மகசூல் திறன் ஆய்வு
- மகசூல் இடைவெளியை கண்டறிதல் (உச்ச மகசூல் திறனுக்கும் உரிமை திறனுக்கு உள்ள வேறுபாடு)
- உச்ச மகசூல் திறனுக்கும் உண்மை மகசூல் திறனுக்கும் உள்ள வேறுபாடினை நீக்குதல்.
- பண்ணை வாரியான பயிர் திட்டம்
- இயல்பு மழை, குறைவான மழை மற்றும் அதிக மழை போன்ற வேறுபட்ட சூழலுக்கான திட்டங்களை தயாரித்தல்

**வேளாண்மை துறையின் செயல்பாடுகள்**

- திட்ட செயல்பாடுகள்
- தொழில்நுட்ப செயல்பாடுகள்
- விரிவாக்க செயல்பாடுகள்
- ஆராய்ச்சி செயல்பாடுகள்

**அ. திட்ட செயல்பாடுகள்**

- டான்சிடா திட்டம் . (விதைப்பண்ணை / விதைக்கோள்முதல் /விதை விநியோகம்)
- தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்
- தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கம்
- தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் – நெல்
- தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் – பயிறு வகை
- விதை கிராமத்திட்டம்
- வேளாண்மை தொழில்நுட்ப வேலாண்மை முகமை
- நுண்ணீர்பாசனம்
- வேளாண் இணையதளம் – பண்ணைப் பயிர் மேலாண்மை திட்டம்

**ஆ. தொழில்நுட்ப செயல்பாடுகள்**

- வேளாண் பருவ நிலைக்கு ஏற்புடைய இரகங்கள்
- திருத்திய நெல் சாகுபடி, தீவிர பயறு பெருக்கத்திட்டம், துவரை நடவு
- அங்கக உரமிடுதல்
- நீர் சேமிப்புக்கான நீர் பாசன தொழில்நுட்பங்கள் (நுண்ணீர் பாசனம், பண்ணைக்குட்டை, மழை தூவுவான், நடமாடும், தெளிப்பான்)
- பயிர் சத்துக்கள் மேலாண்மை
- உயிரியல் பூச்சிக்கொல்லிகளை உபயோகித்தல்
- பயிர் பாதுகாப்பு – தேவைக்கு ஏற்ப எதிர்ப்பு சக்தி உடைய இரகங்கள் ( பருத்தி மாவு, பூச்சி, நெல் குலை நோய் )
- வறட்சியை தாங்க இளஞ் சிவப்பு நிறமுடைய தண்விரும்பி மித்திலோடிராப்ஸ் தெளித்தல்
- பண்ணை இயந்திரமயமாக்கல்

**இ. விரிவாக்க செயல்பாடுகள்**

- சாகுபடி பரப்பு ஒத்திசைவு – இணை அடங்கல் பராமரிப்பு
- விவசாயிகளுக்கு சாகுபடி தொழிநுட்பங்கள் குறித்த காலமுறை அளவிலான பயிற்சி
- விரிவாக்க அலுவலர்களுக்கு நவீன சாகுபடி தொழிநுட்பங்கள் குறித்த காலமுறை அளவிலான பயிற்சி

- வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் உழவர் நண்பர்களை பயன்படுத்துதல்
- பண்ணைகளில் புதிய இரகங்களுக்கான செயல் விளக்கத்திடல் அமைத்தல்
- பயிர் மதிப்பீட்டு ஆய்வு மற்றும் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத்திட்டம் பண்ணை பயிர்மேலாண்மை திட்டம்
- கிராம அளவிலான முகாம்கள் அமைத்தல்
- துவரை நடவு குறித்த மாநில அளவிலான கருத்தரங்கு
- செயல் விளக்கத்திடல்
- விவசாயிகள் பயிற்சி
- வளல்வெளிப் பள்ளி
- அலுவலர்கள் பயிற்சி
- மாநில அளவிலான மணிமனை
- மாவட்ட அளவிலான கருத்தரங்கு
- விவசாயிகளுக்கான கண்டுனர் சுற்றுலா ( மாநிலத்திற்குள்)
- விவசாயிகளுக்கான கண்டுணர் சுற்றுலா (மாறிலத்திற்கு வெளியே)
- குரல் குறுஞ்செய்தி
- வாக்கிய குறுஞ்செய்தி
- வேளாண் இணையதளத்திலும், பண்ணை பயிர்மோலாண்மைத்திட்டம் வளையதளத்திலும் புகைப்படங்கள் மற்றும் தொழில்நுட்ப செய்திகளை பதிவேற்றம் செய்தல்

**ஈ. ஆராய்ச்சி செயல் பாடுகள்**

- மானாவாரி பகுதிக்கான மண்மேம்பாட்டு தொழில்நுட்பங்கள்
- புது இரகங்கள் உருவாக்குதல்
- வறண்ட மற்றும் உவர் நிலத்திற்கான நீர் பாசன தொழில்நுட்பங்கள்
- மேம்படுத்தப்பட்ட இயந்திரமயமாக்கல்
- பயறு வகை அறுவடை கருவி கண்டுபிடித்தல்
- பண்ணை செயல் விளக்கத்திடல் அனுசரனை ஆராய்ச்சி திடல், சிறுதளை செயல் விளக்கத்திடல்

**<u>அரசு விதைப் பண்ணை – பவானி</u>**

அரசு விதைப் பண்ணை, பவானி 23.09.1957 ல் துவக்கப்பட்டது. இதன் மொத்தப் பரப்பு 73.61 ஏக்கர் ஆகும். இதில் 61.00 ஏக்கர் சாகுபடி பரப்பாக உள்ளது. கால்வாய் மற்றும் ஆற்று நீரேற்றம் மூலம் இப்பண்ணை பாசனம் பெறுகிறது.

இப்பண்ணையில் நெல், பயிறு வகை, எள், மற்றும் வீரிய ஒட்டுரக நெல் ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதை தவிர நீலப்பச்சை பாசி, பசுந்தாள் உரங்கள் உற்பத்தி செய்து சலுகை விலையில் மாவட்டம் முழுவதும் உழவர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

<u>விதை சுத்திகரிப்பு நிலையம், பவானி</u>

தமிழக வேளாண் பெருங்குடி மக்களுக்கு தரமான விதைகளை விநியோகிக்க வேண்டுமென்று உயரிய நோக்கத்துடன் இவ்விதை சுத்திகரிப்பு நிலையம் 1978 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ம் நாள் முதல் பவானியில் செயல்பட்டு வருகிறது. இந்த விதை சுத்திகரிப்பு நிலையம் ஆண்டிற்கு 1000 மெ.டன் விதைகளை சுத்தம் செய்யும் திறன் படைத்தது.

<u>அரசு விதைப்பண்ணை, சத்தி</u>

அரசு விதைப்பண்ணை 1.3.1960 ல் துவக்கப்பட்டது. இப்பண்ணையின் மொத்தப் பரப்பு 41.89 ஏக்கர். இதில் 36.10 ஏக்கர் சாகுபடி பரப்பாக உள்ளது. ஆற்றுப் பாசனம் மூலம் 16.1 ஏக்கரும், கிணற்றுப்பாசனம் மூலம் 20.0 ஏக்கரும் பாசனம் பெறுகிறது. இப்பண்ணையில் நெல், சோளம், பயிறு வகைகள், எள், பருத்தி, மற்றும் தக்காளி ஆகிய பயிர்களில் ஆதார நிலை விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த ஆதார நிலை விதைகள் இம்மாவட்டம் மற்றும் பிற மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

<u>சிறிய விதை சுத்திகரிப்பு நிலையம், சத்தி</u>

அரசு விதைப்பண்ணை சத்தியில் இச்சிறிய விதை சுத்திகரிப்பு நிலையம் 1982 ம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

<u>மாநில தென்னை நாற்றுப் பண்ணை, பவானிசாகர்</u>

மாநில தென்னை நாற்றுப் பண்ணையும், மாநில எண்ணெய்வித்துப் பண்ணையும் பவானிசாகரில் ஒரே இடத்தில் ஒரே எல்லைக்குள் அமைந்துள்ளன,

11.07.1980 முதல் பவானியில் செயல்பட்டு வந்த தென்னை நாற்றுப் பண்ணை 01.01.1984 முதல் பவானிசாகருக்கு மாற்றப்பட்டு மாநில எண்ணெய்வித்துப் பண்ணை வளாகத்தில் இயங்கி வருகிறது. ஆண்டு தோறும் நெட்டை ரகம் மற்றும் நெட்டை x குட்டை ரகம் உற்பத்தி

செய்யப்படுகிறது. மேற்படி நெட்டை மற்றும் நெட்டை x குட்டை தரமான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து இம்மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை மூலம் விநியோகம் செய்யப்பட்டுகிறது.

ஆண் குட்டை மரத்திலிருந்து மகரந்தம் சேகரிப்பு தாய் மரங்களுக்கு ஒட்டு செய்து ஆண்டிற்கு சுமார் 50000 நெட்டை மற்றும் குட்டை நெற்றுகள் உற்பத்தி செய்து பவானிசாகர் மாநில தென்னை மையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

**மாநில எண்ணெய்வித்துப் பண்ணை, பவானிசாகர்**

ஆதார விதைப் பண்ணை, பவானிசாகரில் 1952 ம் ஆண்டு தொடங்கப்பட்டது, இப்பண்ணை முழு அளவில் எண்ணெய்வித்துப் பண்ணையாக 1981 முதல் மாற்றப்பட்டு எண்ணெய்வித்துத்துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்தது, 30.11.1991 ல் எண்ணெய்வித்துத் துறை வேளாண்மைத்துறையுடன் இணைந்தமையால் தற்பொழுது வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

இப்பண்ணையின் மொத்தப் பரப்பு 33.14 ஏக்கர். இதில் 7.03 ஏக்கர் சாகுபடி பரப்பாக உள்ளது. நிலக்கடலை, எள் ஆகிய முக்கிய எண்ணெய்வித்துப் பயிர்களில் தரமுள்ள வல்லுநர்நிலை, ஆதார நிலை மற்றும் சான்று நிலை விதைகளை உற்பத்தி செய்தல் இதன் முக்கிய நோக்கமாகும். இப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் வல்லுநர் நிலை மற்றும் ஆதாரநிலை விதைகள் சான்று விதையாக பெருக்கம் செய்யும் பொருட்டு வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

**உயிரியல் கட்டுப்பாட்டு மையம் – பவானி**

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், குருப்பநாய்க்கன்பாளையம் அரசு விதைப் பண்ணணை வளாகத்தில் 01.07.1995 முதல் உயிரியல் கட்டுப்பாட்டு மையம் தொடங்கி செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தில் டிரைகோகிரம்மாகைலோனிஸ், டிரைகோகிரம்மா, ஜப்பானிக்கம், புரோடினியா புழுவிற்கான என்.பி.வைரஸ், டிரைகோடெர்மா விரிடி மற்றும் சூடோமோனாஸ் போன்ற உயிரியல் காரணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் சராசரியாக 2000 சிசி டிரைகோகிரம்மாகைலோனிஸ் அல்லது டிரைகோகிரம்மா, ஜப்பானிக்கம் முட்டை ஒட்டுண்ணியும் 4.00 லட்சம் எல்.இ. என்.பி வைரஸ் 2000 கிலோ டிரைகோடுடர்மா விரிடி மற்றும் 250 கிலோ சூடோமோனாஸ் போன்ற காரணிகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

## தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையம் – கோபிசெட்டிபாளையம்

கோபிசெட்டிபாளையத்தில் தென்னை கருந்தலைப்புழுவைக் கட்டுப்படுத்த பிரகானிட்ஸ் என்னும் புழு ஒட்டுண்ணி பூச்சிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் ஒட்டுண்ணி பூச்சிகள் தென்னை இலையை சேதப்படுத்தும் கருந்தலைப் புழுவைக் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. சராசரியாக ஒரு ஆண்டுக்கு 500 எக்டருக்கு தேவைப்படும் சுமார் 2.5 லட்சம் பிரகானிட்ஸ் ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றது.

## ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையம் – கோபிசெட்டிபாளையம்

கோபிசெட்டிபாளையத்தில் கரும்பு பயிர்களை தாக்கும் இளங்குருத்தும்புழு மற்றும் இடைக்கணுப்புழுவைக் கட்டுப்படுத்த டிரைகோகிரம்மா ஜப்பானிக்கம், டிரைகோகிரம்மா கைலோனிஸ் போன்ற முட்டை ஒட்டுண்ணி பூச்சிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் டிரைகோகிரம்மா கைலோனிஸ் ஒட்டுண்ணி நெல் இலை மடக்குப் புழுவையும் பருத்தி பச்சை காய்புழுவையும் கட்டுப்படுத்த மிகவும் பயன்படுத்தப்படுகிறது. இந்த ஒட்டுண்ணி மையத்தில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 1250 சி.சி க்கு மேலாக ஒட்டுண்ணி முட்டைகள் உற்பத்தி செய்து 500 எக்டருக்கு மேல் விநியோகம் செய்யப்படுகிறது. ஆண்டொன்றுக்கு சராசரியாக 500 எக்டருக்கு மேல் தேவையான என்.பி.வைரஸ் கரைசல் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இந்த திட்டம் செப்டம்பர் அக்டோபர் மாதத்தில் தொடங்கப்படும்.

## உயிர் உரம் உற்பத்தி மையம் – பவானி

ஈரோடு மாவட்டம், பவானி குருப்பநாயக்கன்பாளையம் கிராமத்தில் உயிர் உரம் உற்பத்தி மையம் அமைந்துள்ளது. இந்த உர உற்பத்தி மையம் 2009–10 ம் நிதியாண்டில் 90.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. இதன் மூலம் ஒரு ஆண்டிற்கு 250 மெ.டன் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கு அசோஸ்பைரில்லம் (நெல் மற்றும் இதர பயிர்கள்), ரைசோபியம் (பயறு வகை மற்றும் நிலக்கடலை பயிர்களுக்கு) மற்றும் பாஸ்போ ஆகியன வழங்கப்பட்டு வருகிறது.

## <u>நடமாடும் மண் பரிசோதனை நிலையம் , ஈரோடு</u>

இந்நிலையம் 23.07.1983 முதல் செயல்பட்டு வருகிறது.

அ) இப்பரிசோதனை நிலையத்தின் மூலம் கிராமங்களுக்கு நேரடியாக சென்று மண் ஆய்வு நடத்தி பயிருக்கு கிடைக்கும் சத்துக்களின் நிலையினை அறிந்து சிக்கன உரச்சிபாரிசு செய்து அதிக மகசூல் பெறுதல்.

ஆ) பாசன நீர் மாதிரிகள் ஆய்வு செய்து அதன் தன்மைக்கு ஏற்றவாறு பரிந்துரை செய்தல் மற்றும் தக்க பயிர்கள் பரிந்துரைத்தல்.

இ) பிரச்சினைக்குரிய களர், உவர், நிலங்களைக் கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்ய தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் அளித்தல்,

ஈ) விவசாயிகளின் தோட்டங்களில் பரிசோதனைப் பாத்திகள் அமைத்து ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாக முறைகள் பற்றி செயல்விளக்கம் செய்து காட்டுதல்,

உ) கிராம ஏற்புத்திட்டம், மண் ஆய்வு விழிப்புணர்வு முகாம், கூலி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் அளித்தல்,

ஊ) வேளாண் விரிவாக்கப் பிரிவின் கீழ் செயல்படும் திட்டங்களில் கலந்து கொண்டு மண் மற்றும் பாசன நீர் ஏனைய உயிர் உரங்களின் பயன்கள் பற்றி எடுத்துரைத்தல்.

## பூச்சிக்கொல்லி ஆய்வகம், ஈரோடு

ஈரோடு பூச்சிக்கொல்லி ஆய்வகம் 02.11.1983 முதல் செயல்படத் துவங்கியது.

## ஆய்வகத்தின் நோக்கங்கள்

1. பூச்சிக்கொல்லி மாதிரிகளின் பௌதிக, வேதியியல் குணங்களை ஆய்வு செய்தல்
2. ஆய்வின் மூலம் தரக்குறைவான போலியான பூச்சிக்கொல்லி மாதிரிகளை கண்டறிதல்.
3. பூச்சிக்கொல்லி சட்டம் 1968ன்படி தரக்குறைவான மற்றும் போலியான பூச்சிக்கொல்லி மருந்துகளை கண்டறிந்து தயாரித்தவருக்கு எதிராகச் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காகச் சட்டத்தை அமுல்படுத்தும் அலுவலர்களுக்கு ஆய்வு முடிவுகளை தெரிவித்தல்.
4. தரமான பூச்சிக்கொல்லி மருந்துகள் விவசாயிகளுக்குக் கிடைக்க வழிவகை செய்தல்.

## மண் பரிசோதனை நிலையம், ஈரோடு

மண் பரிசோதனை நிலையம் ஈரோட்டை தலைமையகமாகக் கொண்டு 23.07.1983 முதல் இயங்கி வருகிறது.

1. மண் பரிசோதனை செய்து பயிர்களுக்கு கிடைக்கும் சத்துக்களின் நிலையை கண்டறிந்து சிக்கன முறையில் சிபாரிசு செய்து அதிக மகசூல் பெற வழிவகை செய்தல்.
2. பாசன நீர் மாதிரிகளை ஆய்வு செய்து அதில் கரைந்துள்ள உப்புக்களின் நிலைக்கு தக்கவாறு பரிந்துரை செய்தல்.
3. மண் பரிசோதனைகளின் மூலம் களர், உவர், அமில நிலங்களை கண்டறிந்து அதற்கேற்றவாறு நிலச்சீர்திருத்தம் செய்ய அறிவுரை வழங்குதல்.

4. கிராம ஏற்புத்திட்டம், பகுதி மேம்பாட்டுத்திட்டம், மற்றும் மண் ஆய்வு விழிப்புணர்வு முகாம்கள் போன்ற திட்டங்கள் நடத்துதல்.
5. பாசன நீர் மாதிரிகள் ஈரோட்டில் உள்ள ஒவ்வொரு வருவாய் கிராமத்திலிருந்தும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு பாசன நீர் வரைபடம் தயார் செய்தல்.

## வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை, ஈரோடு

### வேளாண் விரிவாக்கத் திட்டப் பணிகள் ஓர் அறிமுகம்

மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் வேளாண் விரிவாக்க சீர்திருத்தத் திட்டமானது நிலையான, நீடித்த வளம் குன்றா வேளாண் உற்பத்திக்கும், விவசாயப் பெருமக்களின் நிகர வருமானத்தை அதிகரித்து, வாழ்க்கை தரத்தை உயர்த்துவதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

மாவட்ட அளவில் செயல்பட்டு வரும் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமையானது, மேற்கூறிய குறிக்கோளை அடைந்திட விரிவாக்கப் பணிகளை ஒருங்கிணைத்து செயலாக்கி வருகின்றது, இப்பணிகள் அடியிற்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- வேளாண் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் திட்டம் வகுத்தல்
- விவசாயிகள் சார்ந்த பணிகள்
- பண்ணை தகவல் பரப்புதல் சார்ந்த பணிகள்
- தொழில்நுட்பங்கள் மதிப்பீடு மற்றும் செயலாக்கம் சார்ந்த பணிகள்

## உழவர் பயிற்சி நிலையம் – ஈரோடு மாவட்டம்

ஈரோடு மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் 02.10.1980 முதல் தாரபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்தது. பின்னர் பவானியை தலைமையிடமாகக் கொண்டு 01.10.1983 முதல் இயங்கி வந்தது. தற்பொழுது 01.10.2004 முதல் ஈரோடு வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

### உழவர் பயிற்சி நிலையத்தின் முக்கிய பணிகள்

1. உழவர் விவாதக்குழுக்களை கிராமங்களில் உருவாக்குதல் மற்றும் செயல்படுவதை கண்காணித்தல்

2. கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி மற்றும் அமைப்பாளர்கள் பயிற்சிகளை நடத்துதல்

3. விவசாயிகளை வேளாண் ஆராய்ச்சி நிலையங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் சென்று காட்டுதல்.

4. உழவர் தின விழா நடத்துதல் மற்றும் சிறந்த விவசாயிகளுக்கு பரிசு வழங்குதல்

5. தகவல் மற்றும் தொடர்பு பணிகள்.